செய்தி வெளியீடு எண்.727 நாள்.6.11.2007

கோ–ஆப்டெக்ஸ் நிறுவன பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை.

--

இந்தியாவில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் ஆணையின்படி தமிழக அரசு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் 5.11.2007 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணை 366 –ன்படி 2006–2007 ஆம் ஆண்டிற்கு தீபாவளி போனஸ் 8.33 சதவீதம் மற்றும் 1.67 சதவீதம் கருணைத் தொகையாகவும், உச்சவரம்பாக ரூ.4,200/– ஐ வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்த அரசாணைப்படி கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் 1018 பணியாளர்களுக்கு ரூ.42.94 இலட்சம் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்க மாண்புமிகு **கைத்தறித் துறை அமைச்சர்** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி 1018 பணியாளர்களுக்கும் தலா ரூ.4,200/– போனஸ் கிடைக்கும். இந்த தொகை தீபாவளி பண்டிகைக்கு முன்பாக அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு **கைத்தறித் துறை அமைச்சர்** அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9